17,023

ஓம்
கடவுள்துணை

100

# மெய்ப்பொருள் நிலை
# (State of Reality)

பேரறிஞர்
**சே.வேல்முருகு**
ச.நீ.,ப.ம.அ.(இலங்கை)மருத்துவப்பயிற்சினர்.

இயற்றிய பாடல்கள் 1995

மில்ரன் கீன்.்.சு ஜக்கிய அரசு

**Dr.S.Velmurugu**, J.P, Dip M.S (இலங்கை)R.M.P

உரிமை நூலாசிரியற்கே
சே.வேல்முருகு

Milton Keynes
United Kingdom

27[th] April 1997

ஓம்

கடவுள்துணை

# மெய்ப்பொருள் நிலை
## *(State of Reality)*


பேரறிஞர்

சே.வேல்முருகு

ச.நீ.,ப.ம.அ.(இலங்கை)மருத்துவப்பயிற்சினர்.


இயற்றிய பாடல்கள் 1995

மில்ரன் கீன்ஸ் ஐக்கிய அரசு


**Dr.S.Velmurugu**, J.P, Dip.M.S (இலங்கை)R.M.P



உரிமை நூலாசிரியற்கே

சே.வேல்முருகு


Milton Keynes
United Kingdom

27th April 1997

ஓம்

மெய்ப்பொருள் நிலை

# பொருளடக்கம்

அத்தியாயம் பக்கம்


1. முன்னுரை - சொல்லுரை - 4 -6
2. மெய்யுணர்வு - 7 - 11
3. நற்சிந்தனை - 12 -14
4 மனித வாழ்க்கை - 15- 24
5. துரியாதீதம் - 25- 35
6. இனமுறைமை - (அகவல் அடி 102) 36 -39
7. ஞான ஊஞ்சல் - 40 -42
8. இல்வாழ்க்கை நல்லறம் (1-9) 43- 47

**9. Appendix : ( 48 - 60)**

(1) Absolute Knowledge 48-53

(2) Evolution of Mand Kind : 54-60




ஓம்

# பொருள் வணக்கம்

பொன்னில மாத/ ராசை பொருந்தினர் பொருந்தா ருள்ளம்
தன்னிலந் தரத்திற் சீவ சாட்சிமாத் திரயமாய் நிற்கும்
என்னிலங் களிலு மிக்க வெழுநல மவற்றின் மேவாம்
நன்னில மருவு மேக நாயகன் பதங்கள் போற்றி

எவருடை யருளால் யானே யெங்குமாம் பிரம மென்பால்
கவருடைப் புவன மெல்லாங் கற்பித மென்ற றிந்து
சுவரிடை வெளிபோல் யானே சொரூப சுபாவ மானேன்
அவருடைப் பதும பாத மனுதினம் பணிகின் றேனே

என்னுடை மனது புத்தி இந்திய சரீர மெல்லாம்
என்னுடை யறிவினாவே இரவிமுன் னிடீமே யாக்கி
என்னுடை நீயும் நானு மேகமென் றைக்கியஞ் செய்ய
என்னுடையக் குருவாய்த் தோன்று மீசனை யிறைஞ் சினேனே

- கைவல்லியம்

## முன்னுரை

*'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்பதறிவு'—*

என்பது திருவள்ளுவர் தந்த அருளுரை. ஒரு காரியத்தைப் பற்றி எழுதப்பட்ட நூலினை மட்டும் பார்த்து விட்டு அப்பொருளின் உட்கருத்தினையும் தகைமையையும் சீராக ஆராய்ந்துணராமல் தீர்க்க மாக அறிந்துவிட்டோமென எவரேனும் கூறமுடியாது. நாளடைவில் கேட்டனவற்றையும் நூல்கள் மூலம் படித்தனவற்றையும் மறந்து போகும் தன்மையும் மனிதனுக்குண்டு. அவ்வாறு அறிந்தனவற்றை நேர்முகங் கொண்டு நன்றாகச் சிந்தித்துப் பின்னும் நுகர்ந்து பார்த்து அவற்றை ஒப்பிட்டு நோக்கித் தெளிய வேண்டும் அறிவின்மை ஐயப்பாடு மாறுபாடு ஆகிய தடைகள் மனதினின்றும் முற்றாக நீங்கவேண்டும். கூர்ந்த மெய்யறிவு கொண்டு மெய்யுணர்வினையடைய வேண்டும். இந்த மெய்யுணர்வே மெய்ப்பொருள் என்ப.

இருளிற் கண்ட கயிற்றைப் பாம்பு என்றெண்ணித் தடுமாறி அச்சமடைந்து அகலமிதித்தோடுகிறோம்.உண்மையை உணர வேண்டும். விளக்கைக் கொண்டுவந்து வெளிச்சத்திற் பார்க்கும் போது கயிறு கயிறாகவே இருக்கக் காண்கின்றோம். பாம்பு என்ற நினைவு அற்றுப் போய்க் கயிறு எனத்தெளிவுண்டாகிறது. எவ்வாறாயினும் ஊனக் கண்ணி னாற் காணமுடியாத மெய்ப்பொருளை ஞானக் கண்ணினாற் காணமுடியும் மேல்வாரியாக அதனை இல்லையென மறுத்துரைக்க முடியாது.கடவுள் என்ற சொல்லே கடந்த பொருளென்ப. அது ஐம்புலன்களுக்கும் மனதிற்கும் அப்பாற்பட்ட நேர-வெளிக்குட்பட்டாத எண்ணிலியாய் என்றுமே அழியாத உண்மைப்பொருள். படர்க்கையிடத்தில் வைத்துக் கடவுள் எனவும் முன்னிலையில் வைத்து இறைவனைப் பாவனை செய்தும் அறிகுறியாகச் சிலையமைத்து அலங்கரித்து மலர்தூவிப் பூசித்து வணங்கப்படுகிறது.

அப்பரம்பொருள் உருவற்றது அங்கிங்கெனாதபடியெங்கும் நிறை வாகிப் பெருஞ்சக்தி வாய்ந்த சச்சிதானந்தமானதென அனுபூதிபெற்ற சீவன் முத்தர்கள் கூறக் கேட்டிருக்கிறோம். தனி முதற்பொருளாகும் அப்பொருளை மெய்யன்புடன் சிந்தித்துத் தெளிவடையும் போது மனவமைதியையும் மனநிறைவையும்இறைமையையும் இயல்பாவே அகத்துள் துலங்குவதைத் தன்னறிவு கொண்டு நாம் உணரமுடியும். மனிதத்தன்மையும் தெய்வத்தன்மையாய் நாளடைவில் மாற்றமாகிச் சிவத்துவத்தை நுகரலாம்.



17.023.



"சிவம்" என்பதென்ன? அதனை நன்மையான அன்புடன் கலந்து அறிவுமயமான ஒப்பற்ற சுட்டற்ற தனிப்பொருள். அதுவே மெய்பொருள் என்ப. ஆனால் நமக்கு நோக்கரிய நோக்கு நுணுக்கரிய நுண்ணுணர்வு இருப்பினும் அன்பினால் இடையறாத நினைவு கொண்டு அதனை அன்புருவிலேயே காணமுடியும். சீவனெனச் சிவமென வேறுபாடில்லாத அறிவு நிலைகளையும் வேறு வேறாகத் தோன்றிய விரித்திகள் ஒடுங்கும் முறையையும் இந்நூலில் விளங்கிருப்பதைக் காணலாம்.ஐம்புலன் களாலாய நிலவுலகை ஓங்காரத்துள் அடக்கி ஓமென்று அகத்துள்ளே சச்சித்தாக ஒலித்துக்கொண்டிருப்பதையும் விரித்துரைத்துள்ளோம்.இன்னும் சைவ சமயத்திற்குத் தனிச் சிறப்பாகவுள்ள அடித் தளம் "நமசிவாய" என்ற ஐந்தெழுத்தே.

மண்,நீர்,தீ,காற்று, விண்ணியாகிய ஐந்பூதங்கள் முறையே ந - ம-சி-வ -ய -என்ற ஐந்தெழுத்துக்களிலும் ஒடுங்க நிலவுலகம் முழுவதும் எம்முள்ளே காணப்படும். ஆறு ஆதார நிலைகளிலும் ஒடுங்குவதைக் காணலாம். ஐந்தெழுத்துக்களை எவ்வாறு ஓத வேண்டுமென்ற முறை யையும் காட்டப்பட்டுள்ளது. அவற்றைத் தனித்தும் கூட்டாகவும் மாற்றிமாற்றி இன்னிசையை எழுப்பிக் கருத்துடன் மனப்பரப்பில் நின்று சாதனைகளைச் செய்யவேண்டுமென வற்புறுத்தியுள்ளோம்.

சிவாய நம -என்று வேதியர் கோயில்களில் ஓதுவதைக் கேட்டிருக்கிறோம். ஆனால் அதன் உட்கருத்தினை நன்றாக அறிய வேண்டும். அது தொடர் மொழியாயிருந்து "சிவனே" போற்றி" என்ற கருத்தினை மட்டும் தருகிறது. அது தொடர்மொழி மட்டுமன்றி ச-ரி-க-ம-ப-த-நி- என்றும் இசை எழுத்துக்கள் ஏழும் இசைக்கருவிகளிலும் வாய்ப்பாடாகவும் உள்ளன. இவற்றைத் தனித்தும் சேர்த்தும் மாறிமாறி எழுப்புவதுப்போல குறிப்பிட்ட ஐந்தெழுத்துக்களையும் ஓமென்ற ஒலியுடன் யோகசாதனைகளில் மனதினால் நினைத்து உருவேற்றவேண்டுவதே நியதியாகும்.இவையெல்லாம் பாக்களிற்பரந்திருக்க காணலாம்.இன்னும் பாக்களெல்லாம்தொல்காப்பிய இலக்கண விதிகளுக் கமையவே இயற்றப்பட்டுள்ளன. அன்றியும் இனிய இசைதனைக் கேட்பதற்கும் இசை வடிவிலும் இறைவன் இருந்து எமக்கு அருள் புரிகின்றான் என்னும் உண்மையை உணர்ந்து பாடுவதற்கும் ஏற்றவாறு எதுகை

மோனைகளுடன் பாக்கள் அமைக்கப்பட்டுள்ளன. நூலில் மிக உயர்கருத்துக்களை தூய தமிழிலேயே எழுத வேண்டுமென்பது எமது கொள்கையாகும். உலகெங்கனும் பேசப்படும் மொழிகளுள் தமிழே புறமொழிக்கலப்பில்லாத இலக்கண வரம்புகளுடன் 247

## முன்னுரை

எழுத்துக்களைக் கொண்டதுமான சொல்லாக்கத்தாற் பெருகி மிகப்பழமை வாய்ந்த இலக் கியங்களைப் பழங்குடி மக்கள் பேணி வந்தார்கள். ஆனால் இன்று சில எழுத்துக்கள் கணனியென்னும் பொறியச்சினைப் பயன்படுத்தற்கு மாற்றப்பட்டுள்ளன. இவ்வாறு தேவையற்ற மாற்ற ங்களைப் புகுத்தித் தமிழ்மொழியினைச் சிதைக்கக் கூடாது.

நாம் எண்ணற்கரிய பிறவிகளை எடுத்தெடுத்து நெடுங்காலமாக நெடுந்தூர யாத்திரையில் அலைந்து திரிந்தும் மீண்டுமே இவ்வுலகிற் பிறந்திருக்கின்றோம் என்பதைத் தற்போதய மனித வாழ்க்கையைக் கொண்டு ஊகித்தறியலாம். மனம் மொழி காயம் ஆகிய மூன்றினாலும் முற்பிறப்புக்களிற் செய்த வினைகளின் தன்மைகளுக்கேற்ப இன்ப துன்பங்களை நுகர்ந்துகொண்டும் பின்னர் செய்ததொகை வினைப் பயனையும் நுகர்வதற்குப் பிறந்திறந்து திரிகின்றோம் என்னும் உண்மையை எமது பகுத்தறிவினால் அறியக்கூடியதாயிருக்கின்றது. அன்றியும் பிறப்புக்கு வித்து அவாவென்பதை எவரேனும் மறுத்துரைக்க முடியாது. இவ்வுலகிலே நாம் பிறக்கமுன் கோடானுகோடி உயிர்களும் நுகர்பொருட்களும் உண்டாகியும் இன்னுமே உண்டாகிக் கொண்டும் இருக்கின்றன. வெளிப்பரப்பிற் சூரியன் சந்திரன் விண்மீன்கள் ஆகிய அண்டங்களும் எமக்குள்ளே கலன்கள் , இழையங்கள் ஆகிய காணக்கூடிய உறுப்புக்களும் அந்தக் காரணம் மனம் அறிவு என்பவை யெல்லாம் இயல்பாகவே பரிணமித்துள்ளன. ஆனால் காலவெளிக்கப்பால் நோக்கரிய நோக்காய் நுணுக்கரிய நுண்ணுணர்வாய் நிறை பொருளாய்ப் பிறப்பிறப்பில்லாத தனிமுதற் பொருள் அன்றும் இன்றும் என்றுமே எமக்குள்ளும் புறமும் எங்குமே துலங்கிக்கொண்டிருக்கிறதென அனுபூதிபெற்ற சீவன் முத்தர்கள் கூறுகின்றனர்.

உண்மையான தன்னறிவைத் தானே ஆராய்ந்தறிய வேண்டும் நிலையற்ற பொருட்களை நிலையானதென்று எண்ணிப் புறத்தே போய் நுகர்கின்ற இன்பமானது ஐம்புலன்களினாலாகும் சிற்றின்பம் என்பதைப் பகுத்தறிவு கொண்டு தெளிய வேண்டும். மெய்யறிவும் மெய்யன்பும் இணைந்த நுகர்ச்சியே உண்மையான நிலையுள்ள பேரின்பம் மற்றதெல்லாம் புலனின்பம் என்ப ஐம்புலன்கள் புலனறிவாகி நுண்ணறிவாகிப் பகுத்தறிவாகி உள்ளுணர்வாகி மெய்யுணர்வாகும் முத்திநிலை ஓம் ஓம் என்று எம்முள்ளும் புறமும் இடையறாத இன்னிசை ஒலிப்பதைக் கேண்மின்.

**1997 ஆம் ஆண்டு**
**சித்திரை 27ம் நாள்**

**நூலாசிரியர்**
சே.வேல்முருகு



## 2. மெய்யுணர்வு (Sublime Thoughts)

(நேரிசை வெண்பா)

1. ஆத்தி யடியிலமர் ஆனை முகத்தனைப்
பூத்தரு சிந்தையிற் பொற்புற - வைத்தும்
ஏத்தினாலிகால் ஆங்குற்ற இன்னல் துடைத்தெம்மைக்
காத்தருள்வர் அன்பாற் கலந்து.

2. பாராதி தன்னிற் பரந்தெங்குந் நின்றானைப்
பேராற்றல் கொண்டநற் பிள்ளையைப் - பாராட்டிக்
காராரு மாணவக் காட்டில் அலையாமன்
நேராக நிற்பாம் நினைந்து.

3. காட்டுவழி போனாலும் கள்வர்தீங் கானாலும்
கேட்டுவழிக் காரன்தான் கிட்டினும் - நாட்டமுடன்
நம்பிக்கை யுண்டே நமக்கு விநாயகனார்
தும்பிக்கை யுண்டே துணை.

4. நொந்து சுமந்துபெற்று நோவாமல் ஏந்திமுலை
தந்து வளர்த்தெடுத்த தாயாரை - எஞ்ஞான்றும்
சிந்தைகொள் அன்புடன் தெய்வமெனப் போற்றுதல்
முந்தையோர் கண்ட முறை.

5. அன்பும் அறிவு முடைத்தாயின் அத்தன்மை
இன்பந் தருமேகாண் எந்நாளும் - துன்பமில்லை
அன்பினிற் தோன்றி யகத்தே யொளிவளர்
தன்னறிவு தற்பரனே தான்.

6. உண்மை அறிவின்ப வோங்கார வொண்பொருள்
எண்ணிலியாய்த் தன்மயமாய் எல்லாமே - நுண்ணுணர்வாம்
செப்பரிய முத்திநிலை சேர்வோமே அப்பொருளின்
ஒப்பரிய தன்மை உணர்ந்து.

(ஆசிரியப்பா)

7. தந்தை தாய் பேண் பயனும் தந்தையின்
மந்திர மனைய வாசக நினைவுடன்
பற்றிலாப் பணியும் பரனருள்சேர் அன்பும்
கற்றநற் கல்வியும் கடைவழிக் (கு) உற்றதுணை.

8. கல்லினைப் பிளந்தடியிற் கண்ட நீரினைப்போற்
கல்வியைக் கசடறக் கற்றார்க்(கு) அறிவூறும்
ஒவ்விடம் அறிவுக்கு உள்ளமே யாகலின்
கல்வி கற்றற்கும் காலவரை யில்லையே

(எண்சீர் ஆசிரியவிருத்தம்)

9. கனிந்த வினையும் கரைந்தொழிய வேண்டும் கனமே மிகுந்த
காயமெடுத் தோம்நாம்
இனிமேற் பிறவாமைவேண்டும் பிறந்தால் இறைவனை யென்றும்
மறவாமை வேண்டும்
தனியே யிருந்து தன்னொளியில் தன்மயமாய்த் தானே யதுவாகுந்
தன்மையைத் தாங்கிய
புனித நிலைதனிற் புலனைந்தும் பொய்யுலகும் ஜோயகலப் புக்தியிற்
காண்பது பூரணமே.

10. சிவநிலை சேர்வதை ஓயாமல் எண்ணிச் சிந்தனை திருந்தவே
வைத்துச் சிந்திமின்
அவமே காலத்தைப் போக்காமல் ஐம்புலவிளையாட்டை ஓர்ந்துநாம்
அல்லற் படாமல்
அவனருளை ஆர அருந்தி ஆராத ஆர்வம் கூரவே
யமுழ்ந்துவோம் இன்பம்
புவனம் விட்டுப் போவதற்குக் காலம் வந்ததுகாண் பொய்நீக்கிப்
போமா றமைவோமே.





11. பண்டுநான் புலோலியூர்ப்/பசுபதியை/நாடிப்/பன்மலர்த்/தொடைகள்
சாத்துவித்தெத்தனை
கொண்டேன் லிங்கமாகக் கோயிலமைத்துக்/கும்பிட்டுச்/செய்த பூசை
கோதுகந் தந்ததே
ஒப்பரிய தூமணியை யுள்ளத்துள் ஓமெனும் விழுப்பொருளைப்
பொங்கிய உவகையின் மெய்யுணர்வைச்
செப்பரிய முத்தியாங் கரைசேரச் சிந்தித்தேன் சத்தாகிச்
சித்தமிசை நிற்கின்ற தெய்வமே.

12. அதுவென இதுவென அனைத்தையும் பற்றியே அங்காடி நாய்போல்
அலைந்து திரிந்து
கதுமெனப் பொருளைக் கருதியே யீட்டியுங் கடைவழிக்கு வாராது
காண்பதெல்லாம் பொய்யே
எதுவெனினும் இவ்வுலகில் என்றுமே நிலைத்திரா ஏற்கென
நிலையான ஏகம்ப வாணன்
புதுமைப் பெற்றியனென் புந்தியில் நுழைந்து பூரணமாய்
நிற்றலான் நானது வாய்ப் பூரித்தேன்.

13. கூடு விழுமுன் குறைவிலா நிறைவைக் கூர்த்தமெய்ஞ் ஞானக்
கொழுஞ்சுடர்க் குன்றினை
நாடுவேன் நாடோறும் நாத்தழும் பேற நமசிவாய வென்றோதி
நானவனே யென்றென்று
பாடுவேன் பாரோடு விண்ணாய்ப் பரந்தெங்கும் பற்றிலாப்
பரம்பொருளைப் பற்றியே பைந்தமிழில்
நீடுநெஞ்சம் நெக்குருகி நின்றும் நினைவற்று வீழ்ந்தும்
நடந்தும் இருந்தும் நினைந்தேனே.

14. பற்றற்று நிற்கும் பரம்பொருளே •யல்லாற் பற்றுதற்கு
வேறுளதோ பார்தனின் நமக்குப்
பற்றிலா வப்பொருளைப் பற்றினா லல்லது படித்தநூற்
படிப்பினாற் பயனில்லை யாகலின்
பற்றிலாப் பணியும் பண்புசே ரன்பும் பரனருள் பழகிய
வொழுக்கமும் வேண்டுமே.
நெற்றியுட் புருவமதில் நேராக நின்று நினைவே
சிவமாய் நினைதல் செய்வாம்.

15. ஓங்காரத் துள்ளே யுதித்தவைம் பூதங்கள் ஒன்றுடன்
ஒன்றா யொடுங்கியே நானெனும்
ஆங்கார முள்ளடங்க ஐந்தெழுத்தை யோதி அகமுகமாய்
மூலமுத லாறையும் பூசிக்க
ஓங்குமே முகவொளி ஒவ்வொன்றாய்ச் சோதிப் பிழம்பாய்
நிற்கு மொளிதனை யுன்னித்
தூங்காமற் றூங்கித் தூண்டா விளக்கா யெங்கணுந்
துலங்கிநான் சுகம்பெறுவ தெந்நாளோ.

16. காரறிவு போன்ற ஆணவக் காட்டை யழித்துக்
காணூஉம் பாறைக் கல்லினைக்
கூரறிவு கொண்டு பிளந்துள்ள நெஞ்சக மென்னும்
பூமிவெளி காணத் திருத்திப்
பாரார் அறியாப் பரம்பொருளாம் வித்தைப் பதித்தன்பு
நீராகப் பாய்ச்சியே சிந்தனையைச்
சீராக்கி மேலும் பயிரைச் செழிப்புறுத்த மாயைப்
பறவை யணுகாமற் காப்பாயே.





17. வானாகி மண்ணாகி மற்றுள பூதங்கள் அண்டங்கள்
மண்டு மலைகள் வளைகடலாய்த்
தானாகி நானுமாய்த் தனிமுதற் பொருளாம் சத்சித்
தானந்தம் என்னுளும் புறமும்
ஆனாய் ஆதியந்தம் ஏதுமில் அருளாய் நிறைந்த வறிவாய்த்
துலங்குஞ் சோதியே
நானார் சிறியனே யாயினும் ஞானபூமி ஏறித் துரியம்
அடைவதெந் நாளோ.

8. இயமம் நியமம் இருக்கை வளிநிரை இயற்றிப் புலனொடுங்க
ஒன்றியே சிந்தித்தும்
உயர்நிலை நண்ணிமௌன மாகிநான் ஓமெனும் அலைகளால்
ஊக்கமுற்றுச் சும்மா உள்ளிருந்து
அயராமல் எந்நாளும் நிட்டை கூடவே அறிவினில்
நின்றும் உணர்த்துதல் திருவுளமே
செயமிகு ஞான நெறிதனை யடைவனோ தெளிதல்
வேண்டும் தேசிக சிகாமணியே.

**2ஆம் அதிகாரம்/மெய்யுணர்வு முற்றிற்று.**

## 3. நற்சிந்தனை (Right Consciousness)
### (ஆசிரியப்பா)

1. ஆன்றநூல் பலகற்ற பேரறிஞ ராயினும்
ஆன்றநூல் படியொழு காராயின் ஆம்பயனென்
ஆன்றோர் இணக்கமும் ஆலய வழிபாடும்
சான்றோர் அரளுரை கேட்டலுஞ் சால நன்றே.

2. மணற்கேணி தோண்டிய அளவிற்கே யூறும்
மணற்கேணி போல மாந்தர்க்குக் கற்றனைத்தே
ஊறும் அறிவுந்தான் உறுதியான செல்வம்
மாறுபடு பொன்னும் மணியும் செல்வமன்றே.

3. இன்றைய வுலகினில் இன்னல்கள் எத்தனை
இன்றைய விஞ்ஞானம் ஈய்ந்த விளைவுகளுள்
ஆன்மீக ஆக்கமோ அன்றி மனநிறைவோ
ஆற்ற பொருண்ணிறை யமைதிதா னுமுண்டோ.

4. மாதா மரிக்கின் மகனுடல் குன்றும்
தாதா வெனிலவன் கல்வியுந் தளர்வுறும்
மனையில் மனைவியும் இல்லையேல் மாட்சிமை
அனைத்தும் அகன்றிடக் காண்பது காடே.

5. மனமொழிசெய் பண்பான் மாண்புடைத் தாய
மனநிலை மாந்தரின் நாகரீகம் மண்ணிடை
முன்னமே முதிர்ந்து முன்னூழி காலமொப்பில்
இன்னமும் இலங்குவ திந்தியப் பண்பாடே.

### (நேரிசை வெண்பா)

6. தந்தை தாய்பேணல் தந்தையின் சொற்கேட்டல்
முந்தையோர் தந்த முறையென்று - சிந்தையில்
வைத்து மறவாமல் வைகலுஞ் செய்கடன்
கைத்தலத்திற் காட்டுமே பீடு.





7. வேண்டுதல் வேண்டா வாழ்க்கை வேண்டியே
நீண்ட பயணமும் நீடற - மண்ணுலகில்
மீண்டும் பிறவாமை வேண்டுமென மெய்யறிவு
தூண்டுஞ் சுடரொளி காப்பு.

8. என்னுட லாவி யெனதென்ப தெல்லாமுள்
அன்பினா லொப்புவித் தாயிடை - அன்புருவில்
நின்ற பொருளை நினைந்து நினைந்துருகச்
சின்மய மாகுந் தெளிந்து.

9. கருத்துறக் கேட்டுக் கலங்காமல் ஓர்மின்
உருவற்ற சிற்பரன் ஓமென - மருவியே
கண்ணாடி தன்னிலே காணும் நிழல்போல்
உண்ணீர்மை காட்டும் உணர்ந்து.

10. உள்ளமே கோயில் உணர்வே சிவலிங்கம்
தெள்ளிய மந்திரங்கள் சிந்தனையில் - உள்ளுற
ஆதார பூசனையும் அன்புடன் செய்யின்
ஆதார சித்தியுண் டாகும்.

11. உடம்பினா லன்றி யுணர்வுமே உண்டாகா
உடம்பினா லாகிய உள்ளம் - திடம்பட
உள்ளுணர்வில் தோன்றும் ஒலியொளி மெய்யறிவாய்
மெள்ளவே மெய்யுணர் வாகும்.

### (வேறு)

12. ஓம்ரீங் அங்உங் ஓம்சிவ தத்சத்சீ
ஓம்சிவ சத்சித் சிவோகம் சிவோகமென்
ஓங்கார ஒண்பொருளை ஓர்ந்து நான் ஒன்றாகித்
தூங்காமல் தூங்கிச் சுகம்பெற்று வாழ்வேனே.

13. ஓம் நம சிவசிவ ஓம்ஓம் நமசிவ
ஓம்சிவ நமநம ஓம்நம சிவாய
ஓம்தத் துவமசி ஓம்சத் சித்தது
ஓமென வூறி யெழுந்த வுணர்வே.

14. ஓமென் றதுவே ஒளிவளர் ச்சத்சித்
ஓமென் றகத்துள் ஒலிப்பதுஞ் சத்சித்
சிவமய சிந்தனை யெங்குஞ் செறிந்திடச்
சிவமயந் தானெனத் தெளிவது முத்தியே.

(கலிவெண்பா)

15. பாங்காகப் பரம்பொருளைப் பாவனை செய்தேனே
தூங்காமல் தூங்கிச் சுகம்பெற்று வாழலாம்.
நித்திரையில் அடங்குவதே நிலையில்லா விருத்திகள்
நித்திரையில் அடியுணர்வாய் நிலைபெற்ற பேரின்பம்
நித்தமும் நுகரலாம் நேராகத் தன்னையே
சித்தென்று திடமுடன் சிந்தித்து விழித்திருப்பின்
சித்துத்தான் சத்தாகிச் சிவமென்ற நிலைமருவும்
அத்துவித பாவனையில் ஆத்மாவே அறிபொருளாம்
முத்திநிலை யடைதற்கு முழுமையு முணர்சீவன்
முத்தர்கள் மொழிந்த முறையதுவா மெனக்கொண்டு
வினைவழியே வந்து வந்து விணைபோகம் விரும்பாமன்
மனைவிபொருள் மனையென்ற பற்றுள்ளம் மறையவேண்டும்
எனைத்தினுமே மிக்கதோர் இன்பநிலை எய்தவேண்டின்
நினைவற்ற நிலைதனிலே நிறைபொருளை நினைந்துருக
முனைந்தெழுமே யுள்ளுணர்வும் மோனவிருள் போயகல
அனைத்துலகும்அறிவொளியாய் நிற்குங்காண்அந்நிலையில்
தனையன்றி வேறொரு சத்தில்லைச் சித்து மில்லைத்
தனையாய்ந் திருப்பதுவே தத்துவ மல்லாமன்
நானென்ற ஆணவமோ முளைத்தவுடல் நானல்ல
நானென்ற மனந்தானும் கரணங்கள் நானல்ல
தானென்ற நிலயான நிறைபொருளாந் தனிமுதல்
தானென்ற தன்னொளியில் தன்னையுந் தானுணர்த்த
நானென்ற நுண்பொருளை நானென்னிற் சிந்தித்து
நானதுவாய்த் தெளிந்தேன் நயந்து.

**3ஆம் அதிகாரம்:. நற்சிந்தனை முற்றிற்று**



ஓம்

## 4 - மனித வாழ்க்கை (Living State of Man)

(ஆசிரியப்பா)

1. சிந்தனைக் கரியவென் தெய்வமே யெப்பொழுதும்
சிந்திக்கச் செய்வாய் சிவமெனத் தேறிடவே
நன்னெறி நின்றிட நல்வழி காட்டுவாய்
நன்னிலை நண்ணிட உன்னருள் வேண்டுமே.

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

2. கங்கையின் மூழ்கிலென் கடவுளைப் பூசித்தென்
கந்தனைத் தொழுதென்
மங்காமற் கோயிலைக் கட்டவே கோடிதான்
வள்ளலாய் வழங்கிலென்
சங்கையில் ஞான தத்துவம் உணர்ந்தென்
சாமவேதம் ஓதியென்
பொங்குறு காமுகர் புலாலொடு கள்ளுண்போர்
புண்ணிய ராகாரே.

3. மங்கையர் மையலில் மதிகெட்டு மானம்
இழந்த மனிதனாகிப்
பொங்கிய பொருளும் பொருந்திய புகழும்
பறிகொடுத்த போகியாகித்
தங்குமிட மின்றித் தளர்ந்து நடந்துமே
சக்தியின்றிப் போங்காலம்
அங்காடி நாய்போல் அலைந்து திரிந்தவன்
அல்லலுறக் காணலாமே.

4. ஆபத்துக் குதவா நண்பன் அரும்பசிக்
குதவா அன்னம்
தாபத்தைத் தீராத் தண்ணீர் தருமமே
சாரா வாழ்க்கை
பாபத்தைத் தீராப் பதவிகள் எழைக்
குதவாப் பணமும்
கோபத்தாற் கோணிய குருவும் பணிந்தெழாச்
சீடனும் துச்சமே.

5. ஆலிலை பூவொடு காய்கனி அள்ளுறு
பழமும் உண்டேல்
ஆலிலைத் தேடியே வந்துவந் தாயிரம்
பறவைகள் வாழும்
ஆவின் செழுமை அழியுங்கால் ஆங்கவை
நில்லாத வாறு
போலி உலகினிற் போகிகள் பொருள் தேடிப்
போயினரே பெற்றதென்ன?

6. திரைகடல் கடந்தும் திசையெலாம் வானளாவிச்
சுற்றித் திரிந்து மென்ன
கரையிலாக் கலைகளைக் கற்றுமென்ன தாய்மொழியைக்
கைவிட்டுக் காதலாகி
உரைமொழியும் வேறாகி உள்ளங் கவரும்
உரைநடை பாவனையும்
விரைந்தம்மா மேனாட்டுத் தீயவாழ்க்கை மீதுறக்
காணலாம் விருந்திடையே.

7. ஓடியோடிப் பெற்றதெல்லாம் ஓடவிட்டு நற்பயன்
ஒன்றுமே காண்கிலோம்
தேடியது முன்வினைத் தேட்டமே யென்றுணர்ந்து
செம்மையாய் வாழவேண்டும்
கேடிலா அறநெறி கேட்டதனைச் சிந்தித்துக்
கீழ்ப்படிந் தொழுகவேண்டும்
கூடிய சங்கக் குணாதிசயக் கோட்பாடு கோணாமை
வேண்டுமே.





8. செந்தமிழ்த் தென்முனிக்குச் சின்மய தேசிகர்
தெளிவித்த நான்மறைகள்
செந்நெறி மேதையர் சித்தர்கள் மெய்யறிஞர்
செப்பியவை யாகும்
முந்திய நாகரிக மொகஞ்சதரோ மக்கள்
முதற்சங்க காலத்தே
இந்தியப் பண்பாடும் இன்னிசை நாடகம்
இயற்றமிழில் உற்றனவே.

9. தன்வினை யாலாகுந் தாக்க விளைவுதான்
தம்முயிரின் வாழ்க்கை
முன்வினைப் பயனென முகிழ்ந்து நன்றாய்க்
கனிந்ததே நுகர்வினை
பின்னுமே முகிழ்ந்து பிஞ்சாகிக் காயுறு
பேறே தொகைவினை
இன்னுமே அடியுணர்வில் ஊறிய ஈடிணை
விருத்தி நிகழ்வினையே.

10. சும்மா விருவெனச் சொல்லியதுங் கேட்டுப்
பற்றினாற் சோர்வுற்று
இம்மா நிலவிருத்தி ஏதினால் உண்டான
தென்றுந் தெரியாமல்
வெம்மாயை யானதும் விதியிற் பொருந்தியே
ஆசையும் மிஞ்சிட
எம்மை மயங்க விட்டனை இறைவா
இனிநாம் தெளிவதெப்போ.

11. ஆசைச் சுழற்கடலில் ஆழாமல் நாம்பிழைக்க
அன்பே சிவமென்றும்
ஆசையாற் சிந்தித்(து) அல்லும் பகலும்
அதனை அழுத்தி
ஆசை இறைவன்பால் அல்லாது வேறெங்கும்
அன்னுவயம் இல்லாமல்
ஆசைசூர் கண்பறித்தே அப்பிய கண்ணப்பன்
அன்புடைமை வேண்டுமே.

12. பதற்ற நிலைதனிற் பரம்பொருளைக் காண்கிலர்
புறப்பொருட் பற்றுளோர்
இதயத்துள் அதனை இடையறாச் சிந்தனையில்
வைத்துப் பழகவேண்டும்
முதலிற் குணங்கள் மூன்றொடு வாழ்க்கை
முறைமை அறியவேண்டும்
எதன் பொருட்டு வாழவந்து நில்லா தெங்கே
ஓடுகின்றாய் நில்மனமே.

13. தன்னை மறந்தவன் தன்வினைப் பயனால்
தரணியில் வந்திறந்து
பின்னும் நுகர்பொருள் பெரிதுமே பற்றிப்
பெருமிதமாய் வாழ்வதற்கே
இன்னுமின்னும் சுற்றித் திரிந்துதன் இனத்தைப்
பெருக்கிவிட் டிறக்கின்றான்
முன்பின் அறியான் மோகத்தால் வாடியும்
முடிவிடங் காண்கிலனே.

14. தன்னுடலைத் தானென்றே யெண்ணித் தர்க்கமிடுஞ்
சங்கை யொருவர்க்கு
முன்னெழு மாயின் கனவில் முளைத்ததும்
நித்திரை நுகர்ந்ததும்
நன்மையாய் நின்று நனவில் நினைப்பதும்
நானென நவிலுதலும்
இன்பதுன்பம் இத்தன்மைத் தென்பதை உள்ளிருந்
துணர்வதும் அந்தநானே.

15. முந்தை வினைப்பயனால் மூண்டெழும் ஆசை
அலைகள் முந்துறச்
சிந்தை நெகிழ்ந்து சேறித்தான் ஒன்றுடன்
சேர்ந்துமே பற்றிடச்
சிந்தித்துச் சிந்தித்துச் சித்தாகிச் சிந்தையுட்
செய்யுருப் பதிவுறும்
பிந்தியே விரிவுறும் பிறப்புக்கு வித்தாய்க்
கிடந்து பெருகுமே.





16. மனவியல்பு கொண்டு வகையுறு குணங்கள்
மனிதனுக்கு மூன்றுதான்
மனவெழுச்சி தாமதம் மனவமைதி யாகியவை
எவ்வுயிர் மாட்டுங்காண்
மனமடங்கி நித்திரையிற் சூனியமாய் அத்தன்மை
பின்னர் மனதிலெழ
மனவமைதி மேலோங்கி மற்றை இரண்டுமே
மந்தமாயின் மாட்சிமையே.

17. மனத் தூய்மை யுண்டாகி மற்றய குணங்கள்
மறைய இறைவன்பால்
மனமீர்க்கப் பட்டும் மறைமொழியை யோதி
மறவாமற் சிந்தித்துத்
தினமும் பழகச் சிவமாய் எங்குஞ் செறிந்திடக்
காணலாம்
எனதென நானென இரண்டுமற்ற ஞானநிலை
யெய்துவ தெந்தநாளோ.

18. விண்ணொன்றே வானமென்றும் மேகமென்றும் மண்குடவிண்
நீரிடைவிண் ணென்றும்
எண்ணுகின்ற கற்பனைபோல் ஒன்றே யெங்குமாம்
மெய்ப்பொரு ளென்றும்
எண்ணுங் கடவுள் இறைவன் ஆன்மா சீவனாம்
என்ற நான்கும்
நண்ணிய சச்சித் தானந்தம் நன்னிலம் மருவுமேக
நாயகனே.

19. கடநீரில் ஏரிநீரிற் கண்டவான் இரண்டும்
பொய்யெனக் காணலாம்
குடமுடைய வான்வெளி கூடிக் குறையாமல்
எங்குமே ஒரேமய
இடமாய் இறைவன் ஆன்மா இரண்டும்
எப்போதும் ஏகமே
திடமாய்ச் சிவானுபூதி பெற்றுச் சிவோகம்
என்றிருந் திடாயே.

20. தஞ்சமாம் மறைகள் சொன்ன தத்துவ
வழியுந் தப்பாமல்
பஞ்சகோசம் நீக்கிப் பாழையுந் தள்ளி
உள்ளத்திற் பாங்காகி
அஞ்ஞானம் சங்கை அகன்றிடச் சிவமும்
ஆன்மாவும் வேறெனும்
நெஞ்சமும் நழுவியொன்றாய் நின்ற நிறைபொருளைக்
கண்டேன் நேரே.

21. காண்பானும் காட்சியும் கடந்துமே தான்தானாய்
நிற்கும் காலவரை
வேண்டுமே கேட்டால் விசாரணை தெளிதலிவை
வேண்டார் திடமுடன்
யாண்டுமே யாதினாலும் தாக்கற்று யாதிலும்
பற்றில்லாச் சீவன் முத்தர்
மூண்டெழு ஞானத்தீயால் முன்வினை வித்துகள்
முழுதும் எரிந்துபோமே.

22. அரியதாம் மெய்ஞ்ஞானத் தீயினால்
அவித்தையும் உள்ளுடல் நீறாகும்
உரியதாம் நுண்ணுடல் உலையில் இரும்புண்ட
நீர்போல் அடங்கும்
பெரிய பருவுடல் காலனாற் பிணமாகிப் பூதங்கள்
ஐந்துமொன்றாய்
விரிந்தவாறு மண்ணீர் தீகாற்றும் விண்ணெலியாம்
மெய்ம்மை உணரலாம்.

23. மனதினால் எண்ணியே வந்தன மாயா வுலக
விருத்திகள்
மனமன மெங்குண்டோ மாயையும் அங்குண்டாம்
ஏதினால் மறையுமெனின்
மனமதை நோக்கா மறைமுகமாய் மூச்சை
மகிழ்வுடன் அடக்கின்
மனவிருத்தி வாசனையால் வந்தவாறு தன்னறிவில்
எல்லாம் அடங்குமே





## (நேரிசை வெண்பா)

24. தன்னறிவிற் கண்டது சத்தாயின் சாவில்லை
தன் வினையால் ஆயதே தன்னுடல் - தன்னாலோ
அன்றிப் பிறிதொன்றா லாயின் அறிபொருள்
என்பதுதான் நானல்லால் ஏது.

25. தூங்காமல் தூங்கியே சும்மா விருக்க
ஓங்காரங் கேட்குமே யுள்ளத்துள் - போங்காலம்
தூண்டிய வூழ்முடிவிற் சுட்டற்ற ஆன்மா
தூண்டா விளக்காய்த் துலங்கும்.

26. நீண்ட பயணம் நெறிதவறி நேர்ந்தவாறு
மாண்டும் பிறந்தோமே மண்ணிடை - மாண்புடன்
தூண்டும் மனமதைத் தூயதாக்கி வாழ்ந்தாக்கால்
ஆண்டுகள் நற்பயன் ஆகும்.

27. தன்னறிவுந் தானாகித் தன்னை யறியுமே
அன்றிப் புலன்கள் அறிவுறுத்தா - என்றுமே
முன்வினைத் தாக்க முளைகள் விருத்தியாகிப்
பின்-விளைவது காட்டும் பிறப்பு.

28. புலன்கள் புலனறிவாய்ச் சிந்தையிற் பொங்க
உலகெலா முள்ளே உறைந்து - நிலவுதல்
இலதாய் உளதாய் இருப்பினும் உள்ளுணர்
உலப்பிலா உண்மைப் பொருள்.

29. புலனறிவு நுண்ணறிவாய்ப் புந்திவரை நின்று
நிலவுதற்கு உள்ளுணர்வு நீடு - துலங்கும்
நலமாய் அமைந்த ஞான ஒளியிற்
கலந்து கருத்துறக் காண்.

30. பிறந்த மனிதனும் பீடுடன் வாழலாம்
அறவழி வாழ்க்கை யமையின் - இறவா
அறமே அடிப்படை யாகலின் இல்வாழ்
துறவறஞ் செய்யத் துணை.

31. அவா வெகுளி பற்றுள்ளம் ஆணவம் பொறாமயல்
உவாதி தரும்பகைவ ருள்ளே - அவாந்தர
விவாதமிட் டாகூழ் விளைவுக்குக் கேடுறின்
சிவாவென்று சிந்தனை செய்.

32. மெய்யைப்பொய் யென்றுகூறின் மெய்யணையாப் பேதையர்
பொய்யைத்தான் மெய்யென்பர்பொன்னாசையாற்-பொய்யுலகில்
மெய்யான தன்மயத்தை மெய்யாகச் சார்ந்துமே
உய்ந்தசீவன் முத்த ருளர்.

33. பிரியமான சீவன் பிரமவித்துப் பேரறிஞன்
வரியான் வரிட்டனென வந்த - வரிசை
உரிய நிலை எய்தலாம் உண்மை யறிவின்பு
தெரிந்ததுவாய் நிற்கத் தெளிந்து.

34. திரிகரண சுத்தியுடன் சிந்தனை செய்ய
விரிந்த மனம்முன்னர் விட்டுப் - பிரிந்த
தரிப்பிடமாம் மெய்யறிவைச் சார்ந்து தனது
துரியநிலை தாங்கித் துலங்கும்.

35. உடம்பினைப் பெற்ற உணர்வுடையார் முன்பு
கடந்த பொருளைக் கருத்தில் - அடக்கித்
திடம்படச் சிந்தித்த சிந்தனை செவ்வே
தொடர்ந்து சுடரொளி தோன்றும்.





(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

36. பிறந்திறந்து முன்வினைப் பேறு நுகர்ந்தொழியப்
பின்னும் இறந்து
பிறந்துமே நீடுகாலம் பேதைபோற் பந்தத்தாற்
பேதுறாமற் சிந்தனை
அறவழிக்கே யாக்கி அவாவினை யடக்கிப்
பிறவாமை வேண்டுமென
மறவா திருந்து மனமே சிவோக மந்திரம்
பாவனை செய்.

37. தூங்காமல் தூங்கித் துரியத்திற் சோதியாய்த்
துலங்குமெனச் சும்மா
பாங்காகப் பாவனை செய்து பழகினும்
நுகர்விற் பரம்பொருளே
ஆங்குமெங்கும் ஒன்றாய் அறிவொளியாய் நின்றும்
அகத்துள் ஓரொலியாய்
ஓங்சிவ ஓங்சிவ ஓமென்ற இன்னிசை
உண்மை உணர்த்துமே.

38. பாரிய நனவுகனாப் பாழிருளில் நித்திரை
செய்யும் பரப்புகளாம்
கூரிய மனந்தான் குணவிருத்தி யாகிப்பின்
கோதிலாவேழ் ஞானபூமி
நேரிய சுபேச்சை விசாரணை நெறிதவறா
நெஞ்சம் நிலைபெற்றுக்
கோரிய பொய்யெலாம் மறந்து குறைவிலா
மெய்யுணர்தல் தன்னிலையே.

39. மூன்றாம் நிலங்கடக்க முன்னர் மனமடங்கி
முற்றாகச் சத்சித்தில்
ஊன்றி உறைந்தவர் பிரமவித்து நான்கினும்
உயர்நிலமாம் ஐந்திலே
ஆன்ற நிலையை அடைந்த சாதகர் அரிய
பிரமவரன்
தோன்றும் அமைதி துரியம் துரியா தீதமதில்
நானதுவே.

(வேறு)

40. ஓங்கிலிஅங் ஓங்கிலிநங் ஓங்கிலிமங் ஓங்கிலிசிங்
ஒங்கிலிவங் ஓங்கிலியங் ஓங்நம ஓங்சிவ
ஓங்வய நமசிவய ~~ஓங்நமசி~~ ஓங்நமசி ஓங்சிவய
சிவாய நமசிவ சிவநம சிவோகமே.

41. தூங்காமல் தூங்கியே சும்மா விருக்க
ஓங்காரங் கேட்குமென் னுள்ளத்துள் என்றுமே
பாங்காய்ப் பழகாத பேதையே யானாலும்
ஓங்கி யகத்தே ஒளிவளரக் கண்டேனே.

**4 ஆம் அதிகாரம்∴ மனித வாழ்க்கை முற்றிற்று.**



ஓம்

## 5. துரியாதீதம் (Cosmic Consciousness)

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

நித்திரை நீங்கியெழும் நேரமதில் நேராக
நின்று நித்தமும்
சித்தத்தில் ஓமென்ற சிந்தனை பொங்கியெழச்
சீவன் துரியமேறித்
தத்சித் தென்றெண்ணித் தன்னொளியில் தானே
யதுவாகுந் தன்மை
முத்தி யெவ்விடத்தும் மோனமாய்த் துரியா
தீதமாயின் முத்தியே.

நித்தமும் நனவுகனா நித்திரை யாகிய நிலைகள்
யாவர்க்கும்
சுத்தமாயா காரிய சுபாவமே மெய்யறிவும் தூய்தாக
வேண்டும்
சுத்தமாய் மனதுமே சுட்டற்ற பாவனையாய்த்
தூங்காமல் தூங்கிச்
சத்சித் தானந்த மாகிய தன்னிலை துலங்குந்
துரியமே.

மரத்தை மறைத்தயானை போல மதிதனை
மறைத்தது மாயை
பரத்தின் மறைந்தன பார்முதற் பூதங்கள்
பார்பத மண்டமாய்ப்
பரந்த படரொளிப் பரப்பாம் பரம்பொருள்
நிறைந்தமை மனதில்
உரம்பெறத் தம்முளே உற்றுநோக்கி உள்ளுணர்
உயர்நிலை மெய்யுணர்வே.

4. பொறிகள் வாயிலாய்ப் புறப்பொருட் பற்றினாற்
பொருந்திய மனந்தான்
அறிவாய்ப் பரிணமித்து ஆணவங் கன்மம்
மாயையான் மாசுற
அறியாமை மேலிட் டாவரண சக்தியால்
அல்லற் படாமல்
அறிபொருளாம் ஆன்மா சிவமெனத் தேறி
யறிவாய் நீயே.

5. பதிபசு இரண்டும் பாசத்தால் ஒன்றாய்ப்
பரந்ததோர் தனிமுதல்
மதியினால் மாயை மறைந்து மனமொடுங்க
மாண்புடன் சீவனை
எதிரது போற்றி இறைவனென் அனுதினம்
இறைஞ்சிச் சிவமே
கதியெனச் சிந்தனை செய்யத் திடமுடன்
தெளிவது சின்மயமே.

6. வாழவந்த நாமேன் மண்ணிடை நீடுழி
வாழ்மற் சாகின்றோம்
வாழலா மென்பது மாயமே உடலுயிர்
வடிவினை நிலையினை
ஆழமாய் ஆராயின் உண்மை அறியலாம்
ஆன்மா அழிவதில்லை
ஆழவே வந்துவந்து ஆவதும் அழிவதும்
தன்வினைப் பயனே.

7. துரியம் துரியா தீதமேறிச் சும்மா விருக்கும்
துறவிகள்
வரியான் வரிட்டன் வரிசையில் வந்தடைந்த
சீவன் முத்தராவர்
பெரிய சித்திகளைப் பெற்றாலும் பேரிசை பெருமிதங்
கொள்ளார்
தெரித்தலைச் செய்யார் தேவை கருதார் சிவமயச்
சித்தரே.





இவ்வுலகில் வாழ்ந்துதம் எஞ்சிய வினைப்பயன்
இன்னும் நுகரவே
திவ்விய சீவமுத்தர் செய்கடன் தேர்ந்தெதிலும்
பற்றின்றிச் செய்து
திவ்விய செம்பொருள் திண்ணமாய்த் தெரிந்தாலும்
பேதையர் போலிருப்பர்
வவ்வுதல் இல்லாத வானம்போல் வாளா திருந்து
வாழ்வரே.

எத்தொழில் செய்யினும் ஏதமில்லா தொன்றாய்
ஏற்றுழி மனமடங்க
வித்தின்றி அங்கு விருத்திகள் இலதாய் விருப்பு
வெறுப்புமிலா
முத்தருட் பிரமவித்து முள்வினைப் பேறு முழுவதும்
நுகர்ந்து
சித்துருவில் நிற்பரால் சென்றதும் நாளை
சேர்வதும் நினையாரே.

இறுதி நிலைப்படிக ளேறிய வரன்முதல் வரியான்
வரிட்டனாம்
உறுதியான சீவன்முத்தர் உண்மைப் பொருளைத்தம் ப்பவடு
முள்ளத்துள் வைத்துச்
சிறுகுடி லமர்ந்து சிறுகவே தனிமையில் வாழ்நதுசுத
சித்தராய்
அறுதியாய்ச் சமாதியில் ஆன்மா சிவமயமாய் முத்தி
யடைவரே.

முத்தியென்ப விண்ணுலகின் மூர்த்திகள் உறைவிடமோ
அன்றிச் சுவர்க்கமோ
எத்திசை நோக்கினும் எவ்வகையின் நிற்பினும்
ஆங்கிலத்தாய் எண்ணிலியாய்
நித்தமும் சித்தத்திற் சித்துருவாய் நிற்கும்
நிறைபொருளின் தன்மையால்
தத்துவ மசியாம் சதாசிவ நிலையே முத்தியெனத்
தேறுமின்.

12. முத்தியென்னுஞ் சொல்லுரை முதிர்ச்சி முதுமை
முழுமை மோட்சமென்ப
முத்த ரடையும் உயர்நிலை முழுமை யென்பதே
தெளிவுரை
இத்தகைய நிலைதனில் இடைவிடாப் பழக்கத்தாற்
றானே இறைவனாகிச்
சச்சித் தானந்தத் தன்மையாந் தற்பதம்
முழுமுதற் பொருளே.

13. சத்சித் தானந்தத் தன்மை இலக்கணம் சரியாய்
அறிய வேண்டும்
சத்தெனப் படுவது தங்காலங்கள் மூன்றினும்
சாவின்றி வாழ்தல்
சித்தெனப் படுவது சிற்சட பேதங்கள்
சிந்தித் தறிதலாம்
சுத்தமான ஆன்மா துன்பமின்றி அன்பினில்
தோன்றிய அடியுணர்வே.

14. மெய்யன்பும் மெய்யறிவும் மெய்யுணர்வாய் மேதினியில்
மெய்விட்டு நுண்ணுருவில்
மெய்நெறிசேர் சீவன்முத்தர் மீளாக் கதியே
மெய்நிலை யென்றாங்கு
உய்யும் வகையினை யுணர்த்தி விட்டு
மௌனமாய் ஓமெனும்
மெய்ப்பொருள் ஒலிப்பவுள் வெளிவழியே ஓடித்
துரியநிலை மேவுவரே.

15. உயிர்கள் உலகினில் வாழ்வதற்கு ஊனுடன்
உறக்கமும் தேவையே
பயிர்களும் நீரோடு பசளையு மின்றி முளைத்து
வளரமாட்டா
உயிரெலாம் இரவினில் உறங்கியே நித்தமும்
உயிர்க்கக் காண்கின்றோம்
உயிர்த்தெழுஞ் சுகவாரி ஊற்றின்பம் சச்சித் (து)
ஓமென்பதை உணரலாமே.





16. சத்துக்குச் சித்துவே றாயின் சத்தில்லை
யாகுமன்றோ சான்றெங்கே
சித்தா யிருத்தலே சத்தாகும் சித்துக்குச் சத்து
வேறாகாதால்
சத்துடன் சித்துமுக் காலமும் ஒன்றாய்ப் பொருந்திட
ஆனந்தம்
சத்தாகித் தானே சித்துமாகிச் சான்றுமாய்த்
தனிமுதலாய் நின்றதான்மா.

17. வெப்பமானி செம்மையாந் தன்மைகள் நெருப்புக்கு
வேறிலாத வாறு
செப்பிய சத்சித் தானந்த சீவனும் சிவமும்
வேறல்லச்
செப்பிய விதிகள் விலக்குகள் சேர்குணங்கள்
ஒன்றுபட்டதெல்லாம்
ஒப்பரிய மெய்ப்பொருள் ஒருமையைத் தேர்ந்து
நிறைபொரு ளாவாய்நீ.

18. அகத்தே அறிதுயில் கொள் ஆன்மா அடியுணர்வாய்
அன்புருவில் ஆயிடை
அகண்டிதப் பரப்பில் ஆதபன் கதிர்கள் பட்ட
தாமரைபோல்
அகங்குழைந்(து) ஓமென விழிப்பதை அறிதல்
முன்னுணர்ப் பேரின்பம்
உகுந்த உவகை ஊற்றெழ உளமதிற்
புலனின்பம் ஓங்குமே.

19. உடலிற் கரணம் உலகு நுகர்பொருளில்
உற்ற விருப்பம்
உடலினுட் சத்சித்தாம் ஆன்மாபால் உன்னதமாய்
உள்ளத்தை உணரலாம்
அடங்கியது சுட்டற்ற ஆனந்த மயமாய்
அடியுணர்வில் எம்முளே
இடம்பெற் றிருப்பதை நித்திரைவிட் டென்றும்
எழுதலின் நுகரலாமே.

20. கூறிய நனவுகனாப் பாழிருளும் கோரிய
        ஞானபூமி ஏழினும்
    ஏறிவந்த சீவர்கள் எவ்விடம் எய்தினரோ
        அவ்விடத்திற் கேற்ப
    அறிவுமுதிர் அன்புடைய ராகி அறியாமை
        விட்டகல ஆன்ற
    நெறிதவறாச் சீவர் சிவமாய் நிறைவாய்ப்
        பேரின்ப முத்தராவர்.

21. போகமாய் வருஞ்சுகம் புலனின்பம் நித்திரையில் ப்
        போதுணரிற் பேரின்பம்
    மோகந் தெளியும் சமயம் முகிழ்சுகம் வாசனா
        வின்பமே
    சோகமில் அறிதுயிற் பேறு சுகந்தரும் ஆன்மா
        மீண்டுமேன்
    போகமாய் வெளியே வருவானேன் பூர்வத்திற்
        செய்த வூள் ஒழிவதற்கே.

22. முந்திக் கூறிய மூன்று குணங்களும் மூவித
        விருத்திகளாய்
    மந்தமே மூடமாய் மனவெழுச்சி கோரமாம்
        அமைதி சாந்தமாகும்
    இந்த விருத்திகளின் பேதத்தால் இன்புற
        இருக்கின்ற சச்சிதானந்தம்
    சொந்த விருத்திப் பிரிவினாற் சொரூப பேதங்கள்
        காணலாம்.

23. சடமான மூடத் தருக்கல்லு மண்களிற்
        சத்தொன்றே தோன்றும்
    இடர்தருங் கோர விருத்தியாம் காமத்தில்
        இன்பம் விளையாது
    திடமான சாந்த விருத்தியாம் ஒழிவிலே
        சித்துசத் தானந்தங்காண்
    மூடங்கோரம் விட்டு முழுமனமுஞ் சாந்தமாயின்
        பேரின்பம் முன்னிடுமே.





24. உண்பதும் உறங்கலும் உறவும் உயிர்கள்
        பாற்காண் இயல்புகளாம்
    மண்ணில் இறவாமல் வாழுமவா எல்லா
        உயிர்களிலுங் காணலாம்
    எண்ணுங்கால் வாழ்க்கை என்பது இன்பத்தைத்
        தேடும் முயற்சியே
    அண்டித்தம் அன்பினில் அடியுணர்வாய்த்
        தோன்றும் அறிதுயில் இன்பமே.

25. அன்பும் அறிவு முடைத்தாயின் அத்தன்மை
        ஆத்மவின்ப மென்றுணர்த்தத்
    துன்பமின்றி வாழலாம் துரியநிலை தன்னுள்ளே
        துலங்கக் காணலாம்
    தன்னறிவு மெய்யுணர்வாய்த் தன்மயமாய் நிற்பதைத்
        தானே யறியவேண்டும்
    தன்னறிவிற் கண்டதே சத்சித் தானந்தம்
        சான்றுமாய்க் கேட்குமோம்.

26. உண்மை தெரிவிக்குஞ் சக்தி உணர்வினதே
        கன்மத்திற் கில்லை
    எண்ணிய கருமம் எவரேனுஞ் செய்யவேண்டும்
        அன்றேற் சித்தியில்லை
    கண்ணினாற் காரிருளிற் கண்ட கயிற்றினைப்
        பாம்பெனக் கணித்தோர்
    கண்ணிருந்துங் காண்கிலர் கருத்தினைக் கருத்துறப்
        பார்க்க ஞானம் வேண்டுமே.

27. கன்மங் களாலாய காரியமாம் போகவின்பம்
        காரணமாய்ப் பின்புமாறி
    இன்னும் நுகர்வதாற் பிறவிக்கே வித்தாகி
        இம்மை மறுமையில்
    துன்பத்திற் கேதுவாய்த் தொடர்பவ விருத்திகள்
        தொலையாத வாழ்வாகும்
    கன்மங்கள் பற்றிலாக் கடமை உணர்வுடன்
        செய்தொழியின் ஞானமே.

28. இப்படித்தான் வாழவேண்டு மென்று அறிநெறி
இயம்புமே யாயினும்
எப்படியும் வாழலா மென்று அறிவிலிகள்
சிற்றின்பம் எய்துதற்கே
அப்படிக் கூறித்தான் அங்காடி நாய்போல்
அலைவதையுங் காணலாம்
அப்போ திருந்தவிதி இப்போ தமையா தென்பது
மூடமே.

29. சோதி ஞானம் என்பதே தூண்டா விளக்காய்த்
துலங்கும் ஆத்மா
கோதிலா நித்திரை கொண்டெழும் பொழுதில்
மலரும் கோதுகத்தால்
ஆதிமூலம் ஓமெனச் சொரூப மாகி விருத்திஞானம்
உண்டாகும்
ஏதிலா அஞ்ஞானம் எஞ்சிய விருத்தியாய் மருவி
இருக்குமே.

30. கண்டறிதல் ஞானமாம் கேட்டதைக் கருதும் பாவனை
பேகமாம்
கண்டவர் சொல்லக் கேட்டது மறந்துபோம்
கண்டது மறவாதே
கண்டது மெய்யே கருதியது பொய்யே
ஆதலால் ஞானக்
கண்ணினாற் பார்க்கமாய காரியவஞ் ஞானக்
களைதனைப் பிடுங்கலாமே.

31. அன்பே சிவமென் றொருவரால் அறிவித்துச்
சிந்திக்கும் அவ்வமயம்
அன்றிக் காட்டிய உருவத்தைக் கேட்டவன்
அகத்தினாற் பாவனை
அன்புடன் செய்யும் வேளையி லாயினும்
உண்மை அறிகிலன்
தன்னறிவை அப்பொருளில் வைத்துச் சத்சித்
தெனிலுண்மை தானதுவே.





32. நித்திரைப் பொழுதில் நினைவற்றுப் பாழிருளில்
நின்றவாத்மா நிர்மலமாய்
நித்தமும் சாந்தமாய் நிலவினும் எதிரிடை
நினைவலைகள் மோதலாலே
அத்தன்மை அந்தக் கரண ஐம்புல விருத்தியாய்
அறிவுபோலப்
புத்தியிற் சாயவாய் உள்ளும் புறமும் மனமென
வுலாவுமே.

33. எரியும் விளக்கால் இருளிற் கிடக்கும் பொருளைக்
காணவேண்டும்
தெரியும் கதிரவனைத் தேடியே காண்பதற்குக்
கண்மட்டும் போதும்
விரிந்த உலகினைக் காண விருத்தியும் மனமும்
வேண்டும்
புரியும் விசாரணை யொன்றெ போதும்
மெய்ப்பொருள் காண்போர்க்கே.

34. விருத்தியும் பலமுங் கூடும் விகார வடிவமே
மனமாகும்
விருத்தியிற் பலத்த விகார வடிவுடை
மனத்திற்குச் சித்தெட்டா
விருத்தியிற் பகுத்தறிவு சேர்ந்த விசாரமாயின்
ஆத்மா விளங்கும்
விருத்தியில் ஞான விசாரணைக்கு உள்முக
மாகுதல் வேண்டுமே.

35. மனமன மெங்குண்டோ மாயையு மங்குண்டு
மாயை மயக்கத்தால்
மனம் மொழி காயத்தாற் செய்யும் மனிதனது
கன்மமே விருத்தியாக
மனமடங்கி மண்ணீர்தீ காற்றுவிண்ணி வானிற்
பரந்த நிலவுலகை
மனங்கொண்டு ஐம்புலன் களாக்கி மனத்திரையிற்
காணும் விருத்தியே.

36. அகமுக விருத்திஞானம் உண்டேல் ஆன்ம
ஞானமும் துலங்குமே
புகமுன் புறத்திற் கண்டதும் புந்தியிற் கொண்டதும்
பொய்த்தோற்றம்
அகத்திரையிற் பட்டவொளி ஆன்ம விருத்தி
யறிவன்றி வேறல்ல
முகத்துக்கண் கொண்டு பார்க்கின்ற மூடர்
அப்பொருளைக் காண்கிலரே.

37. தெய்வநம் பிக்கை சிறிதுமில்லா மானிடர்
சிலருளர் இவ்வுலகில்
தெய்வம் உளதாயின் கண்ணினிற் தெரியாத
தொன்றே யாகலின்
பொய்யெனக் கூறிப் பொய்யான தம்மெய்யைப்
போற்றித்தாம் நீடுவாழப்
பொய்யுலகை மெய்யென்போர் பொய்யான நாகரீக
வாழ்க்கையிற் காணாரே.

38. புறப்பொருள் ஆய்வினாற் பூவுலகிற் கண்ட
முடிவென் அழிவல்லால்
அறநெறி விருத்தியே ஆத்மவின்பம் வாழ்க்கையில்
ஆன்ற நிறைவின்மை
உறவினால் உறுதுன்பம் உற்றசீர் கேடுதொழில்
வீழ்ச்சியுங் காணலாம்
திறம்பட வாழலாம் திருவருளால் தெய்வ
சிந்தனை தெளிவுறின்.

39. மின்னணுக்கள் நுண்ணணுவைச் சுற்றியோடி மீண்டும்
கருப்பொருளில் ஒய்வதுபோல்
முன்வினைப் பயனாக முத்தி யடையும் முறையில்
உயிர்கள்
இன்பத்தை நோக்கி இதனடியாய் இம்மை மறுமை
இரண்டினும்
துன்பந் தொடரு மாகலின் தொடர்பவம்
தொலைதற்குப் பற்றறுமின்





40. பிறவிகளுள் மானுடமே யாதினும் பெருமை
யுடைத்தாம் பகுத்தறிவால்
அறவழியே வாழ்ந்தும் அரனருள் திருவுள்
ளாக்கமும் உடையவன்
அறவுரை கூறவல்லான் ஆங்குநல் லொழுக்கமும்
அடக்கமும் உடையான்
அறநெறி ஓம்புதற்கே யல்லால் இல்வாழ்க்கைப்
பூணிப்புத் தொடர்தலாகா.

41. காதலெனும் பற்றுக் காமநோயின் வாசனாத்
தாக்கமே யன்றி
ஆதாரவோ ஆன்ற இரக்கமில்லா அந்தக் கரண
அதிர்ச்சியே
காதலை நிலையுள்ள மெய்யுணர் வென்று கணிக்கவும்
நீதியில்லை
ஆதலால் மனப்பரப்பில் உற்றவுட் பகைமை
யானதை அகற்றுமின்.

42. நனவில் உழல்மனிதன் ஞானபூமி ஈறாம் துரியாதீ
தத்திலுறத்
தனதென்றும் தன்னை யல்லாத வேறு நினைவின்றிச்
சமாதியில்
மனமடங்கிச் சித்தின் சுகநிழல் மனதிற் சேருங்கால்
அந்நேரம்
மனமசை யாமலே மதியாய் அதுவாய்ச்
சிவமய மாகுமே.

ஓம்சத்சித் அதுவே.

**5.ஆம் அதிகாரம் துரியாதீதம் முற்றிற்று.**

## 6. இனமுறைமை (Social Culture)

( அகவல் - ஆசிரியப்பா)

01. இந்துமா கடல்சூழ் இலேமோறாக் கண்டமொன்று
முந்திய கடற்பெருக்கால் மூழ்கியபின் னெழுந்து
இங்கும் இலங்கைசேர் இந்தியா எனவும்
04. இலங்கை வடபாற்காண் ஈழமாய்த் தமிழினம்
வாழ்நாடே ஆங்கின்று மக்கள் மனங்கலங்கி
ஊழ்வினைப் பயனாக ஊர்விட்டு அகதிகளாய்
வாழ்வுதேடி வான் கடந்தும் வாய்ப்பின்றி யெங்குமே
08. தாழ்வுற்று மௌனமாகிச் சக்தியில்லாத் தன்மை காண்
வடமா நிலயாழ் நகர்சூழ் வட மராட்சி
கடந்த காலமெல்லாம் கல்வியிற் சிறந்து
விளங்கிய கல்விமான்கள் விஞ்ஞான மெய்ஞான
12. வளமுடன் இருந்து வாழ்ந்ததெங்கே யின்று
பிள்ளைகள் நல்வழியே வாழவைத்தல் பெற்றகடன்
பிள்ளைகள் பெற்றாரைப் பேணுதல் செய்நன்றி
கற்புறு மனைவிக்குத் தெய்வம் கணவனே
16. மற்றுமச்சம் நாணம் மடம்பயிர்ப்பு நான்கும்
கற்பின் பண்புமாகிக் காப்பரண் ஆகுமே
பொற்புறு மன்னர் பொருந்திய குடும்பங்கள்
குலைந்தும் மக்களுட் குணாதிசயம் அற்றபலர்
20.. கலைந்திருப் பதையெங்குங் காணலாம் மேற்றிசையில்
விரும்பிய வாறே வெட்கமின்றி முத்தமிட்டு
மருவுதல் மனிதபண்பு என்றே வரவேற்பு
அத்தகைய நாகரீக மக்கள் அநேகமாய்
24. நித்திய வாழ்வு நிலவுலக போகமென்பர்
நித்தியம் நிலையின்மை நிச்சயிக்க வேண்டும்
சத்தெது சித்தெது சடமெது இன்பமான
சுத்த நிலை நன்றாய்த் துலக்கமிலாப் பேதையர்
28. புலன்களின் அதிர்சியாற் புந்தியிற் கொண்டு
நலமென நுகரின்பம் நாட்செல வெறுத்துப்





புறவழியிற் காதலாகி விட்டிலைப் போல
இறப்பதைக் காணலாம் இன்றைய நோயதுவே
32. காதலெனும் பற்றுக் கருத்தொருமித் தாலுமக்
காதலும் சொற்ப காலத்தின் ஆர்வமாகும்
மெய்யன்பும் மெய்யறிவும் மெய்யுணர்வும் அல்லாத
பொய்வாழ் இல்லறம் புனித மாகாதே
36. மனிதனில் இயல்பா யமைந்துள்ள ஆன்மா
தனிமுதலாம் சித்தும் சத்துமாய்ப் பகுத்தறிவாய்
உள்ளும் புறமும் மனமென உலாவும்
உள்ளே பதிவுறு உணர்வுகள் உலகமென்ப
40. உயிர்கள் கண்டதை உண்பதும் புணர்வதும்
உயிரின் இயல்பே உயர்நிலை யடைய
மனதை யடக்கி மறைமுதலோன் சிந்தனை
மனதிலே வைத்து மறக்க வேண்டும் ஆசையை
44. மண்ணுகர் பிள்ளையின் நோயை மாற்றற்கு
எண்ணியே மருந்தினை இனியதே னோடு
உண்பித்தல் போல இல்லாள் ஒருத்தியுடன்
வாழ்ந்துலக இன்பமும் நுகரவே மனையற
48. வாழ்முறை வகுத்தும் வறுமைக் குரியனவுங்
காட்டி இருவினையாற் காணும் பிறவிநோய்
ஈட்டும் விருத்திகள் ஈடணையால் மீண்டும்
தொடர்பவம் தொடரா தொழியத் துறவறம்
52. திடமுடன் செய்திடின் திண்ணமாய் முத்தியே
மறைகள் வகுத்த வருணாச் சிரமமுறை
குறைவிலா வளம்பெருக்கும் கூட்டுறவு கொண்டு
மறையோர் அரசர் வணிகர் கமத்தோர்
56. இறைமை இழக்காத வாறுதம் கடமை
திறம்படத் தெளிவுடன் செம்மையாய் நேர்மை
அறமெனும் அறிவுடன் அனைத்தும் முடிவடையின்
நாட்டுமக்கள் நல்லவர் நலமுடன் நிறைவுடன்
60. போட்டி பூசலின்றி வாழவைக்கும் பூர்வமுறை
பேரொளிப் பரப்பினிற் பாரோடு விண்ணுமாய்

உடலுயிர் உலகம் நுகர்பொருள் யாவுமாய்ப்
பரந்தெங்கும் சித்துமாய்ப் பரிணமித்த பேரொளி
64. நிரந்தரம் நிதானம் நிர்ணயம் நிறைவாய்க்
கருவாய்க் கண்ணிருந்தும் காணார் அரும்பொருள்
விருத்தியாகி மெய்யறிவாய் மெய்யுணர் சத்தியாய்
உள்ளும் புறமும் உருவற்ற நுண்ணுணர்வாய்
68. எள்ளின் எண்ணெய் போலக் கலந்து
தத்துவம் தமக்குள் இருக்கத் தரணியெலாம்
பித்தராய்ப் பொன்னொடு பெண்ணாசை யுள்ளோர்க்கு
எத்தனை பிறவிகள் இன்னும் வருமோ
72. அத்தனையும் நிச்சயம் நுகர்ந்தே யாகும்
அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகும்
உளமதை யொடுக்கி உயர்நிலை யடைவே
ஆசை யறுமின் ஐம்புல வுணர்ச்சியாம்
76. ஆசைப் பொருக்கால் அடைவது புலனின்பம்
இல்லறத்தின் நோக்கம் எளிதினில் இசைந்து
நல்வழி சென்று நன்னிலை யடைதற்கே
கல்லாலின் கீழிருந்து காட்டிய குறியும்
80. வில்லினைத் தாங்கிய வேடனின் அன்பும்
தில்லையிற் காட்டிய திருநடனம் சேர்ந்தன
எல்லாம் இறைவன் திருவுளமே என்றுணர்மின்
வானிற் பெய்யும் மழைநீரின் தன்மை
84. நானிலத்திற் பாயுங்கால் மண்ணின் நலமாகும்
எத்தன்மைத் தான இனத்தினரோ சேர்ந்தவர்
அத்தன்மை யான அறிவுடையோ ளாவர்
சிற்றினஞ் சேரார் தெளிவுடையோர் யாண்டும்
88. நற்சிந்தை நல்லொழுக்கம் நல்லினம் நாடுவரே
தம்பிரா னருளாலே தற்போதம் உண்டாகும்
எம்பிரானே தானாகிக் காணப தெந்நாளோ
தன்னையும் தன்னுள் அடங்கிய என்னையும்
92. ஒன்றென வுணரின் உணர்வும் அதுவே
அசைதரு காலும் அனலும் புனலும்





அசைவிலா வெளியும் அகிலமும் ஒடுங்க
இசைந்து ஓமென இசைப்ப மோனமாய்
96. இசைநிறை ஆத்மா இறைமை அடைந்தும்
துரியா தீதமாய்த் தூய்மை துலங்கும்
புரிந்த நிலையிற் பூரணம் அடையலாம்
சரிவரச் சமாதி வரையும் சாதனை
100. திடமுடன் செய்தல் தெய்வப் பண்பே
தெளிந்த நிலைதனிற் சீவன் சிவமென
102. ஒளிவளர் உளமதில் உணர்ந்த உணர்வே.

ஓம் சிவ சத்சித்

சே.வேல்முருகு

